# முரசொலி

முரசு 1 | சென்னை 23 — 4 — 54 வெள்ளி ஒலி 4


# நேருவுக்கு நேர்மையான பதில்!

"திராவிடநாடு பிரிக்க வேண்டுமென்று கோரும் தலைவர்களின் பேச்சுக்களைப் படித்தேன். பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியவர்கள் வெளியிலே திரிகிறார்களே, என்று ஆச்சரியப்படுகிறேன்!"

**- தில்லியில் நேரு**

டாக்டர்கள் எப்போதும் ஆஸ்பத்திரிக் குள்ளேயே இருக்க மாட்டார்கள். நேரு போன்ற தலைவர்களைத் தேடிக்கொண்டு வெளியிலேயும் ஓடி வருவார்கள்.

## ★ அந்தோ திராவிடமே! ★

- கும்பமேளா நிர்வாணக் காட்சி பைத்தியக்காரத்தனமில்லையாம்!
- கோத்தலவாலையுடன் கும்மாளம் போட்டது பைத்தியக் காரத்தனமில்லையாம்!
- பிரிட்டிஷ் ராணிக்கு மாம்பழக் கூடை தூக்கியது பைத்தியக்காரத்தனமில்லையாம்!
- நிர்வாகத்தில் ஆயிரம் ஓட்டைகள் அமைத்துக்கொண்டது பைத்தியக் காரத்தனமில்லையாம்!
- கபார்கான் கோரும் பக்டூனிஸ்தான் பைத்தியக்காரத்தனமில்லையாம்!
- கரேனியர் கேட்கும் தனி நாடு கோரிக்கை பைத்தியக் காரத்தனமில்லையாம்!
- நாகர்களின் தனி அரசு போராட்டம் பைத்தியக்காரத் தனமில்லையாம்!
- பாகிஸ்தானைக் கொடுத்துவிட்டு இந்துஸ்தானம் பெற்றது பைத்தியக் காரத்தனமில்லையாம்!

## திராவிட நாடு கேட்பது மட்டும் பைத்தியக்காரத்தனமாம்!

### ஆசிய ஜோதியின் புது அகராதிகள்!

●

1. நான்சன்ஸ்
2. சிறுபிள்ளைத்தனம்
3. முட்டாள்தனம்
4. காட்டுமிராண்டிகள்
5. பைத்தியக்காரர்கள்
6. ????

### அந்தோ! திராவிடமே!

அழப் போகிறாயா?

அல்லது

எழப் போகிறாயா?

●

### அரசியல் புதுமொழி

●

காமாலைக் கண்ணனுக்கு எல்லாமே மஞ்சளாகத் தெரியும்; பைத்தியக்காரனுக்கு யாரைப் பார்த்தாலும் பைத்தியமாகத் தெரியும்.


# மித்திரன் தலையங்கம் - சித்திர விளக்கம்

ஒரு தேச சமுதாயத்துள்ளேயே மிக அபத்தமான வாதங்களின் பேரில் பிளவுகள் பெருக்கப் படுபதைப் பார்க்கிறோம். இதற்கு அடிப்படையாகவுள்ள மௌடீகத்தைக் களைந் தெறிந்து, மக்களின் சிந்தனையை நேரான வழியில் திருப்புவதில் எழுத்தாளர்களுக்குள்ள சக்தியும், பொறுப்பும் மகத்தானவை. ஆனால் இந்த சக்தியை துஷ்பிரயோகம் செய்யும் ஈனபுத்தி படைத்த சிலரும் எழுத்தாளர் கூட்டத்தில் பதுங்கியிருப்பது பகிரங்க ரகசியம்.''

தில்லையிலே நடைபெற்ற அகில இந்திய எழுத்தாளர் மாநாட்டைப் பற்றி தலையங்கம் எழுதவந்த சுதேசமித்திரன் ஏடு, ஏப்ரல் 17ம் நாள் இதழில் மேலே காணும் சத்தான கருத்துக்களை முத்தான எழுத்துக்களால் கோர்த்து அளித்திருக்கிறது. சுதேசமித்திரனா இத்தகைய அரியகருத்துக்களை-மறுக்க முடியாத உண்மைகளை வழங்கியிருக்கிறது என்று கேட்கத் தோன்றும்! ஆமாம் தோழர்களே, ஆமாம்! அக்கிரகாரத்தின் சேடயம்—அகில இந்திய பிராமணியக்குரல்—ஆரியகான சபாவின் ஆலவட்டம்—என்றெல்லாம் புகழப்படும் மித்திரன் ஏடுதான் இது போலத் தீட்டியிருக்கிறது.

தில்லையிலே மாநாடு நடந்தது! முல்லையிலே சிரித்த—தமிழ்க் கொல்லையிலே வந்து—வசைபாடித்திரும்பும் வடக்கத்தி இசைவாணர் நேரு, மாநாட்டைத் திறந்து வைத்தார். எழுத்தாளரை இந்த புவனியின் காவலர்—நாவலர்—பாவலர் என்றெல்லாம் வர்ணித்தனர். ஒரு நாட்டை வளப்படுத்தும் ஆற்றலும் வகைப்படுத்தும் திறமையும் எழுத்தாளருக்குண்டு எனப்போற்றினர்—புகழ்ந்தனர். அதன் தொடர்ச்சியாகத்தான் மித்திரன் தலையங்கமும் எழுதியிருக்கிறது.

ஒரு தேச சமுதாயத்தில் பிளவுகள் பெருக்கப்படுகின்றன என்ற விஷயத்தை எவ்வளவு வேதனையோடு வெளியிட்டிருக்கிறது மித்திரன்! அரசர்—அந்தணர்—வணிகர்—வேளாளர் என தொழில் முறையிலே பிரிக்கப்பட்டாலும் சமுதாயத்திலே அனைவரும் சமத்துவமுள்ள மனிதர்களே என்ற உண்மையை ஜெகமதிரக் கூறுகிற திருக்குறள் கம்மிடத்திலே ஆட்சி செய்தது ஒரு காலத்திலே! வள்ளுவன் என்ற வாய்மையும் வலிமையும் கொண்ட எழுத்து வேந்தன், தெள்ளு தமிழில் தீட்டித்தந்த நீதிப் பெட்டகம் குறள். அந்தக் குறளை ஒடுக்கிடும் விதத்திலே எழுத்தாணி பிடித்தோரின் அணி வகுப்புத்தான் மித்திரன் ஆசிரியர் வருத்தமுடன் கூறுகிறாரே; சமுதாயத்திலே பிளவுகள் பெருக்கப்பட்டிருக்கின்றன என்று; அந்தப் பிளவுகளுக்குக் காரணமாக இருந்த அணிவகுப்பு! ஒன்றே குலம்ஒருவனே தேவன் என்றே வாழ்ந்த பெரிய சமுதாயத்தினிடையே நச்சு விதைகளைத் தூவி, கோடிக்கணக்கிலே தெய்வங்களைக் குவித்து சாதிகளை இறைத்து, பிளவுகளைப் பெருக்க அந்த எழுத்தாளர் அணிவகுப்புத் தான் காரணமாயிருந்தது.




"எழுத்தாளர்களுக்குள்ள சக்தியும், பொறுப்பும் மகத்தானவை. ஆனால் இந்த சக்தியை துஷ்பிரயோகம் செய்யும் ஈன புத்தி படைத்த சிலரும் எழுத்தாளர் கூட்டத்தில் பதுங்கியிருப்பது பகிரங்க ரகசியம்."

— மித்திரன் ஏப். 17.

பிராமணர்—க்ஷத்திரியர்—வைசியர்—சூத்திரர்—அவர்களின் கிளைகள்—கிளைகளில் பிரிவுகள் என்ற நிலையை உண்டுபண்ணி—அதற்கெல்லாம் ஆண்டவனை இழுத்து வந்து நிறுத்தி ஆகமங்களை வேதங்களை நிறுக்கிக் காட்டி பெரும் குற்றம் புரிந்தனர் அந்த எழுத்தாளர்கள். திருவிளையாடல் புரிவதிலே வல்லவர் திரிபுரம் எரித்தவர் என்று ஒருவர் திருவிளையாடல் புராணம் எழுதினார்—அதிலே தாயைத் தாரமாக்கி, தந்தையைக் கொன்ற மாபாவிக்கு மதுரை சொக்கநாதர் காட்சி தந்து மன்னித்தார் என்று ஒரு திருவிளையாடலைத் தீட்டினார். இயற்பகையின் இல்லக் கிழத்தியையே இடபமேறும் இறைவன் பள்ளியறைக்கு கூப்பிட்டான் என இன்னொரு எழுத்தாளர் காவியம் வரைந்தார். சிதம்பரம் தீக்ஷதர் அனைவருமே கடவுளின் அருள் பெற்றவர்கள். —தில்லை மூவாயிரவர் என தெய்வப் பிரிவு ஒன்றுண்டு—என்பதாக இன்னொருவரின் எழுத்தாணி கூறியது.

"தேச சமுதாயத்திலேஏற்படும் பிளவுகளுக்கு அடிப்படை, மௌடீகம்தான்" என்று சுதேசமித்திரன் குறிப்பிடுகிறது. முற்றிலும் உண்மை. அந்த மௌடீகத்தின் விளைவால்தான் சமுதாயம் பலவாறாகப் பிரிந்து சிதைந்து கிடக்கிறது. பாரத, ராமாயண, கந்த லீலாக்கள் நாட்டிலே மௌடீகத்தைத்தான் பரப்புகின்றன. அந்த மௌடீகந்தான் சமுதாயத்தின் பிளவுகளுக்கு அடிப்படையென்கிறார் மித்திரன் ஆசிரியர் நமது கருத்தோடு ஒத்துவரும் அவருக்கு அறிவுலகத்தின் சார்பாக பாராட்டுக்களை தெரிவிக்க வேண்டியதுதான். எழுத்தாளன்தான் ஒருநாட்டை சிருஷ்டிக்கிறான். ஒரு சமுதாயத்தை உருவாக்குகிறான் என்பதை யாரும் மறுக்க முடியாது. சங்க காலத்திலே தமிழகத்தின் எழுத்தாளர்கள் எழுதிக் குவித்த ஓவியங்கள் தான் தமிழருக்குப் பெரும் சொத்தாக இருக்கிறது. அந்தச் சொத்தைச் சூறையாட எண்ணிய சூதர்கள்தான் சொத்தை இலக்கியங்களை சொக்கவைக்கும் வித்தை காட்டி தமிழகத்தில் நுழைத்தனர். அப்படி வந்த அணி வகுப்பிலேதான், வியாசர்; மனு போன்றவர்களும், இன்றைய தினம் அவர்களின் நிழல்களாக வாழ்ந்து வருகிறவஞ்சகர்களும் இருந்தார்கள்-இப்போதும் இருக்கிறார்கள். மக்களின் சிந்தனையை நேரான வழியில் திருப்பாமல், சொர்க்க மென்றும் நரகமென்றும், தேவலோகம், தபோலோகம் என்றும் பற்பல அற்புத வழிகளிலே திருப்பிய தீயவர்கள் அந்த எழுத்தாளர்கள். மக்கள் சமுதாய மென்ற யானையைக் கீழே தள்ள மதப் படுகுழியமைத்து அதைப் புராண இலக்கியமெனும் இலை சருகுகளால் மறைத்து நின்ற இழி தகையோர் அந்தப் பேனா ஏந்திகள். அத்தகையவர்களைத்தான் மித்திரனார், ஈனபுத்தி படைத்தவர்கள் என்று குறிப்பிடுகிறார். ஆமாம், முழுவதும் உண்மை! மௌடீக அடிப்படையிலே வளரும் சமுதாயப் பிளவுகளை அதிகமாக்கி, மக்களின் சிந்தனையை நேரான வழியில் செலுத்தாமல் துஷ் பிரயோகம் செய்யும் எழுத்தாளர்கள் ஈனபுத்தி படைத்தவர்கள் என்பதுதான் சுதேசமித்திரன் தலையங்கம் தீட்டியவரின் குற்றச் சாட்டு! குற்றச் சாட்டுடன் முடிக்கவில்லை அவர்! அந்த ஈனபுத்தி படைத்த சிலரும் எழுத்தாளர் கூட்டத்தில் பதுங்கியிருக்கிறார்கள் என்று எச்சரிக்கை செய்கிறார். அவரது எச்சரிக்கையைத்தான் இந்த இதழ் கேலிச் சித்திரம் விளக்கிக் காட்டுகிறது. ஃ

## மன்றம்

[மாதம் இருமுறை வெளியீடு]

ஆசிரியர்;

**இரா. நெடுஞ்செழியன்**

மே திங்கள் முதல் நாள் மலர் 3 மலர்கிறது. அன்பர்கள் தங்கள் அன்பினையும் ஆதரவினையும் சந்தாதாரர் ஆவதிலும் சேர்ப்பதிலும் காட்டுவாராக!

விற்பனையாளர் இல்லாத ஊர்களில் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

தனி இதழ் அணா 4.

ஆண்டுக் கட்டணம் ரூ. 6

ஆறு மாதம் ரூ. 3

விலாசம் :—

நிர்வாகி,

**"மன்றம்"**

26, நைனியப்பன் தெரு

மண்ணடி ○ சென்னை-1.

# தலையங்கம்

சென்னை (23—4—54) வெள்ளி

## பண்டிதர் பேசுகிருர் படமும் பேசுகிறது!

**தென்னுட்டை டெல்லிக்காரர்கள் ஆளுவதாகச் சொல்லுகிருர்கள். உண்மை அதுவல்ல; தென்னுட்டார்தான் டெல்லியை ஆளுகிருர்கள். டெல்லியிலே பெரும்பாலான தென்னுட்டவர்கள் வாழுகிருர்கள்.**

என்ற விதத்திலே நமையாளும் நாயகர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள் அண்ணுமலை நகர் மாணவர் கூட்டத்தில் சொற்பொழிவு நிகழ்த்தியிருக்கிருர். டெல்லி மாநகரத்திலும், வடநாட்டுப் பகுதிகளிலும் தென்னுட்டவர் வாழ்கிருர்களே, அப்படியானுல் தென்னுட்டில் வடநாட்டார் வாழ்வதற்கு தடையேதற்காக என்ற கேள்வியைத்தான் நேரு அவர்கள் திரையிட்டுத் திறமையாகக் கேட்கிருர். வடக்கேயிருந்து வருபவர்களும் – தென்னகத்தில் குடியேறி வாழ்வு நடத்துகிறவர்களும் எப்படிப்பட்டவர்கள் – தெற்கேயிருந்து வடக்கே சென்றிருப்பவர்கள் அங்கே எத்தகைய வாழ்க்கை நடத்துகிருர்கள் என்பதை சற்று சிந்தித்தால் பெரியமனிதரான நேரு, எவ்வளவு பெரும் பொய்யைப் பொழிகிருர் என்பது தெளிவாக விளங்கும்.

தென்னகத்துத் தெருக்களிலே சௌகார் பேட்டைகளை அமைத்துக் கொண்டு, கோடி கோடியாகக் குட்டி போடும் பணப் பெட்டிகளை அடுக்கிவைத்து வட்டிபோட்டு சம்பாதிக்கும் வடநாட்டு மார்வாரிகளும் அவர்களைத் தட்டிக்கேட்டால் சட்டம் கொட்டிடும் எனப் பயமுறுத்திக்காவல் புரியும் ஏகாதிபத்ய அரசும், தனது ஏகபோகமான நிரந்தர சொத்துக்கள் எனக் கருதிக் கொண்டிருக்கும் பண்டிதநேரு அவர்கள் தென்னுட்டு மாணவர்களைப் பார்த்து பொய் பொழிந்திருப்பதில் ஆச்சரிய மில்லை,

வடக்கே, பம்பாயிலும் டெல்லியிலும் வாழுகின்ற திராவிட மக்கள் வடநாட்டு மார்வாரிகளைப் போலவோ, திராவிடத்தில் வியாபாரம் செய்து கொழுக்கும் குஜராத்திகளைப் போலவோ வளமாக இருக்கிருர்கள் என்று நேரு கூறமுடியுமா?

பள பளப்பானமேனி – பகட்டு மங்காத தலைப்பாகை – பட்டும் ஜரிகையும் வேய்ந்த பீதாம்பரம் – தக தகவென மின்னும் தங்கம்— ஜொலிப்பு கொட்டும் வைரம் — இந்த நிலைமையிலே தென்னுட்டு வீதியிலே தேர்போல நகர்ந்துவரும் திண்டு நிகர் வடநாட்டு உருவமெங்கே? தேரைகளாய் – எறும்புகளாய் தேம்பியழவும் சக்தி அற்றவர்களாய்—வடநாட்டு மண்ணில் திண்டாடி நிற்கும் தெற்கு சீமையின் ஏழைஜீவன்கள் எங்கே?

இரண்டையுமா சமமாக ஒப்பிட்டுப் பேசுகிருர், சகலகலா பண்டிதர் எனும் பெயர் பெற்ற நேரு? சற்குண சீலர் என்பார்களே நேருவை—அவரா கண்ணுக்குத் திரையிட்டு திராவிடரின் நெஞ்சப் புண்ணுக்குத் தீயும் இடுகிருர். கொடுமை! கொடுமை!!

பம்பாயிலே தாராவி எனும் ஒரு இடம் இருக்கிறது. தாராவி மட்டும் தானு இருக்கிறது. தங்கக்கலசமுள்ள மாளிகைகள் இருக்கின்றன. தரைக்கும் ஆகாயத்துக்கும் நிறுத்திய தூணே—என ஐயுறும் கூட கோபுரங்கள் இருக்கின்றன. அந்தப் பம்பாயிலேதான் தமிழர்கள் குடியேறி வாழ்கிருர்கள். மாளிகைப் பகுதிகளிலே அல்ல! மாடிவீட்டு ஓரங்களிலுமல்ல! தாராவி எனும் ஓரப்பகுதியிலே! நீராவியின் முன்னே நிற்க வேண்டிய கொடுமையையும் தாங்கிக் கொள்ளலாம்; தாராவியிலே வாழ்வதைவிட அது மேலாகத் தானிருக்கும் எனப் புலம்புகிருர்கள் அங்குள்ள மக்கள். தேங்கி நிற்கும் சாக்கடைகள். அவைகளிலே நாய் பன்றிகள். அவைகளோடு தமிழர்களின் குழந்தைகள். தெருவெல்லாம் தோலின் அழுகல் நாற்றம். அந்தத் தோலைச் சுரண்டிப் பிழைக்கும் நமது தோழர்கள். நேரு கண்டிருக்கிருரா அந்தக்காட்சியை! காணுமலா இருந்திருப்பார்—களி கொள்ளாமலா இருந்திருப்பார்! தென்னுட்டாரும் வடநாட்டில் சுரண்டுகிருர்கள்; உண்மைதான்—வடநாட்டார் தென்னுட்டில் சுரண்டுகிருர்கள்; அதுவும் மறுக்க முடியாததுதான்! இருவருமே சுரண்டுகிருர்கள். இவர்கள் அங்குபோய், எருமைத்தோலை—மிருகத்தோலை சுரண்டுகிருர்கள். அவர்கள் இங்கு வந்து திராவிடரின் இருதயத்தோலையே சுரண்டுகிருர்கள். இவ்வளவு தான் வித்தியாசம். இந்த வித்தியாசத்தைத்தான் விவேகி நேரு, விசித்திரமான வியாக்யானத்துக்குப் பயன் படுத்துகிருர்.

அன்ருெரு நாள் அருமை நேரு அவர்கள் திருவனந்தபுரம் வந்த போது "திரும்பிப்போ!" என்ற முழக்கத்தை அந்தப் பகுதி மக்கள் எழுப்பினுர்கள்! அப்போது நேரு சொன்னுர்; "நான் திரும்பி டெல்லிக்குப் போகிறேன்—போனதும் டெல்லியிலுள்ள தென்னுட்டாரை திருப்பி அனுப்பி விடுகிறேன்" என்று! ஆத்திரமாகப் பதில் கூறிய ஆசியாவின் ஜோதி திரும்பி டெல்லிக்குப் போனுர். போனவர் முதலில் கூறியபடி டெல்லியிலுள்ள திராவிடரை திருப்பி விரட்டவில்லை. காரணம்; டெல்லி நிர்வாகத்திலே திறமையோடு காரியமாற்றும் நல்ல மூளைகள் தென்னுட்டிலே யிருந்துதான் கொண்டு செல்லப் பட்டுள்ளன. அந்த மூளைகளின் உதவியால்தான் தென்னுட்டில் ஆதிக்கம் செலுத்தி நேருவால் வாழமுடிகிறது. அவர்களை யெல்லாம் திருப்பி அனுப்பிவிட்டு, இங்குள்ள வடநாட்டுப் பனியா முதலைகளையும், ஆலஅரசுகளையும், தொழில் திமிங்கிலங்களையும் திரும்ப அழைத்துக் கொள்வாரேயானுல் அதுவே திராவிடத் தனியரசின் உதய மென்று கூறுவோம்; நாம்! டெல்லியைத் தென்னுட்டார் ஆளுகிருர்கள் என்று மாணவரிடையே முழங்கிய நேரு அவர்களுக்கு திராவிடம் தரும் பதில் இதுதான். சென்னையிலே வடநாட்டு மார்வாரி மாலை நேரத்திலே கழுதைகளுக்கு பட்சணங்களை வாரியிறைத்து கடவுளுக்கு பிரார்த்தனை செய்கிருன். அந்தக் கழுதைகள் சிந்தும் தின்பண்டத் துண்டுகள் சிறிதாவது கிடைக்காதா என்று தென்னுட்டு ஏழை ஏங்கி நிற்கிருன். இதே போலத்தான் பம்பாய் மாதுங்காவிலே, குஜராத்திப் பிரபுக்கள், புருக்களுக்குப் பல் வகைத் தானியங்களை, பலகாரங்களை வாரியிறைத்து பகவானைத்தோத்தரிக்கிருர்கள். அந்த இடத்திலே தென்னுட்டு ஏழைச் சிறுவர்கள். "பாபுஜி!" என்று பரிதாபக்குரல் எழுப்பி, ஒரு பலகாரத் துண்டுக்காக பல் காட்டி அழுகிருர்கள்.

பழுப்பு நிலக்கரி விளைகிறது இங்கே! நெய்வேலி பூமியிலே தோண்டப்பட்ட அந்த சுரங்கத்திற்கு நிர்வாகியாக ஒரு வடநாட்டு முதலாளி! அந்த முதலாளியின் கீழே பல தொழிலாளர்கள்—அவர்களிலே வடநாட்டார் பாதி. தென்னுட்டுத் தொழிலாளி செய்யும் அதே அளவு வேலையைத்தான் வடநாட்டுத் தொழிலாளியும் செய்கிருன். ஆனுல் வடநாட்டுத் தொழிலாளிக்கு ஊதியம் மூன்று ரூபாய் நாள் ஒன்றுக்கு! தென்னுட்டுத் தொழிலாளிக்கு நாளொன்றுக்கு பதினைந்து அணு!

பண்டிதர் பேசுகிருர்; டெல்லியிலே தென்னுட்டார் குவிந்து கிடக்கிருர்கள் என்று! எப்படிக்குவிந்து கிடக்கிருர்கள் என்பதை இதோ கீழேயிருக்கும் படம் கூறுகிறது. இந்தப் படம் பம்பாயிலே எடுக்கப் பட்டது. "கிரேன்ட்ரோடு" என்ற சாலை யோரத்திலே—நகரின் மத்தியப் பகுதியிலே மண்வெட்டி போட்டு கூலிவேலை செய்யும் சேலத்து திராவிடர்கள் இவர்கள். இவர்களிலே சிலர் முன்னுள் மரமேறிகள்—நொந்து போன கைத்தறியாளர்கள். அவர்களிலே ஒருவன் பெயர் காவேரி. ஆமாம் காவேரிதான்! காவேரிபாயும் திராவிடத்திலே பிறந்த காவேரி, கங்கைபாயும் பிரதேசத்துக்கு சென்று கையாளாக வேலை செய்கிருன். வரண்ட காவேரிகள் — வளமான கங்கைகள்! ஆனுலும் பண்டிதர் பேசுகிருர் டெல்லியில் தென்னவர் மிகுந்துவிட்டனர் என்று! கீழேயுள்ள படமும் பேசுகிறது; கேளுங்கள் — உண்மை புலப்படும்! உணர்ச்சி வெளிப்படும்!!



# வேலன்-வேடன்

தென்னரசு

புரவி யெடுப்புத் திருநாள்தான் அந்த சிற்றூருக்குப் பெரு விழா. மதுரைக்கு ஓர் சித்திரா பௌர்ணமி, தில்லைக்கு ஓர் ஆருத்ரா தரிசனம் எப்படியோ அப்படித்தான் அந்தப் புரவி யெடுப்பும் அவர்களுக்கு! புரவி யெடுப்பு நடத்தாத சிற்றூர் பாண்டிய மண்டலத்தில் மிகக் குறைவு! அந்த மூன்று நாள் விழா முடிவதற்குள் ஊரே கிடு கிடுத்துப் போகும் அவ்வளவு ஆர்ப்பாட்டம், கேளிக்கை, கூத்து!

ஐந்தாண்டு காலமாக உட்பூசலால் துண்டாடப்பட்டிருந்த தாழையூர் இப்போது ஒன்றுபட்டு விட்டது. கோயிலிலே 'முதல்மரியாதை'யாருக்கு முதலியாருக்கா,மூப்பனுருக்கா!" என்ற தகராறு உயர்நீதி மன்றம் வரை போய், சர்க்காரே அந்த விழாவுக்கு தடை போட நேர்ந்தது. சுயமரியாதைக் கட்சிக்காரர்களின் பிரச்சாரத்திற்கு அந்தத் தகராறு ஒரு சுவை மிக்க சேதியாகிவிட்டது.யாருக்காக–எந்தத் தெய்வத்திற்காக விழா நடத்துகிறார்களோ, அந்தத் தெய்வமே தகராறைத் தீர்த்து வைக்க முடியாமல் தூங்குகிறதே என்று பேசத் தலைப்பட்டார்கள். பழுத்துப்போன 'பக்திப் பரவச'ங்களைக்கூட இந்தப்பேச்சு'சபாஷ்' போட வைத்துவிட்டது.

வீம்பும், வைராக்கியமும் படிப்படியாகத் தேய்ந்து 'புரவி யெடுப்பு' நடந்தால் போதும் என்று கருதுமளவிற்கு தாழையூர் வாசிகள் பண்பட்டு விட்டார்கள். புரவி யெடுப்பும் அதைத் தொடர்ந்து மூன்று நாட்கள் தெருக் கூத்தும் நடத்துவதென ஊர் முடிவு செய்தது.

முதல் நாடகம் 'வள்ளி திருமணம்'. அதுவும் வேலப்பா முருகன் வேடம் தாங்கி நடிக்கிறானென்றால் கூட்டத்திற்குச் சொல்லவா வேண்டும்! முறுக்கு மாலை போடுகிறவர்கள், 'ஒன்ஸ் மோர்' கோஷ்டியினர், கூட்டத்திலே குழப்பம் விளைவிக்கும் குள்ளநரிக்கும்பல் இப்படி பலப்பல ரகத்தினர் மேடைக்கு முன் அமர்ந்திருந்தார்கள்.

நாடகம் துவங்கிற்று.

பபூன் வந்தான். பாராளும் நம்பி ராஜர்கள் வந்து போனார்கள். ஆரணங்கு வள்ளி வந்தாள், ஆலோல கீதமிசைத்தாள்.திரை விழுந்தது,ரகளை தொடங்கியது.

'ஏ ஆர்மோனியம்! நாடகமே உலகம் பாடு!"

"அது வேண்டாம், சரளி பாடு!"

"சரளி பாடாதே, இதென்ன நச்சேரிக் கொட்டகை என்று நினைத்தாய்? வண்ணான் வந்தானே பாடு!"

இவ்வாறு கூட்டத்தின் நடுவே இருந்து குரல் ஒலிக்கத்தொடங்கியது. ஊர் நாட்டாண்மைக்காரர் மேடைக்குச் சென்று காந்தியின் பெயரில் ஒரு பாட்டைப் பாடச் சொன்னார். ஆர்மோனியப் பெட்டிக்காரர் "காந்தியோ பரம ஏழை சந்நியாசி" என்ற பாட்டைப் பாடி முடித்தார். திரை தூக்கப்பட்டது–சுப்ரமணியர் மயில் வாகனத்தில் வீற்றிருந்து 'சம்போ மகாதேவா' என்ற பாட்டைத் தொடங்கினார். எங்கும் அமைதி! தத்ரூபமாக முருகனே வந்து விட்டதாக எண்ணிக்கொண்டு கன்னத்தில் போட்டுக்கொண்ட 'முருகதாசர்கள்' எத்தனை பேர் தெரியுமா? அப்பப்பா, வைதீகத்தின் ஆணிவேர் எவ்வளவு தூரம் பாய்ந்திருக்கிறது என்பதற்கு இது ஒன்றே போதுமே!

பொது மக்கள் அனைவருமே மெய் மறந்து போய் பாட்டை ரசித்துக் கொண்டிருந்தார்கள். பாட்டு முடியும் கட்டம், முருகனின் தொண்டைகம்மியது. கூட்



டத்தில் அதிருப்திப்பேச்சு தொடங்கியது.திடீரென்று முருகன் மயில் வாகனத்திலிருந்து விழுந்து விட்டான். இந்தச் சமயம் பார்த்து பெண்கள் பகுதிக்குள் ஒரு குறும்புக்காரன் ஒரு செத்த பாம்பை வீசி விட்டான். கேட்க வேண்டுமா, குழப்பத்திற்கு! ஒரே கலவரம், பேய்க் கூச்சல்!

கூத்து மேடையைச் சுற்றி ஒரே கூட்டம்.வேலும் கையுமாக இருந்த முருகன் சாய்ந்து கிடந்தார்—ஆமாம், வேலப்பனுக்கு பிரக்ஞையில்லை. அவன் அணிந்திருந்த வைர நெற்றிப்பட்டமும் பவளக் கிரீடமும்தான் விளக்கின் ஒளியில் மின்னிக்கொண்டிருந்தன.

ஃ ஃ ஃ

வேலப்பன் திக்கற்றவன்—ஆனால் ஒரு காலத்தில் அவன் குடும்பம் தீங்கனி வாழ்வுநடத்தியதுண்டு. பொறாமையாலும் போட்டிஉணர்ச்சியாலும் வேலப்பனின் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டது. எப்படியோ வேலப்பன் நிக்கிரையாகாமல் தப்பித்துக் கொண்டான்—ஆனால்அந்த செந்தீ வேலப்பனின் வயோதிகப் பெற்றோரை ஜீரணமாக்கிக் கொண்டது.

மேகநாதர்! — தாழையூரில் செல்வாக்குள்ள மனிதர்களில் இவரும் ஒருவர். ஏழைகளிடம் அவருக்கு ஈகை உண்டு, இரக்கமுண்டு, ஆனால் சந்தேகப் பிராணி! வேலப்பனை வளர்த்து வந்தவர் மேகநாதர் தான்.

. மேகநாதருக்குநாடகத் துறையில் பணியாற்ற வேண்டுமென்று அளவிடற்கரிய ஆசை. உள்ளூரிலுள்ள இளைஞர்களை யெல்லாம் சேர்த்து ஒரு நாடகக் குழு அமைத்தார். 'வள்ளி திருமணம்' நாடகம் தயாராயிற்று. அதிலே வேலப்பனுக்குத்தான் 'வேலன்' வேடம்.

கோதை!–இவள் மேகநாதரின் ஏகப் புதல்வி.கோதைக்குவேலப்பன்மீது ஒரு கண்! அவனுக்கும் அப்படித்தான்.

பெரியசாமி பிள்ளை அந்த ஊரிலேயே பெரிய பணக்காரர்–நினைத்ததைச் சாதிக்கும் வல்லமை பெற்றிருந்தார், பணத்தால்—அதிகாரத்தால்!

அன்று அவர் மேகநாதரை அவசரமாக அழைத்திருந்தார். "மேகம், நானும், நீயும் ஒன்றாகப் படித்தவர்கள். உனக்கு அவமானம் என்றால் அது எனக்கும் தான்.நீயும்கேள்விப்பட்டிருப்பாயென்று நினைக்கிறேன்" என்று பீடிகை போட்டார் பெரியசாமி.

மேகநாதருக்கு ஒன்றும் புரியவில்லை. "நீங்கள் சொல்வது எனக்குஒன்றும் புரியவில்லையே" என்றார்.

"வேலப்பனையும், கோதையையும் பற்றி ஊரிலே என்ன பேசிக் கொள்கிறார்கள் தெரியுமா?" என்றார்.

மேக நாதருக்கு தலை சுற்றியது. உடனே எழுந்து வந்து விட்டார்.

ஃ ஃ ஃ

கைபட்டுப்பட்டு அழுக்கேறிப் போன நாடகப் புத்தகம்விரிந்து கிடந்தது. சிங்கமுகத்துடன் கூடிய கருங்காலிப் பிரம்பு, பாக்குரல், வெற்றிலைப் பெட்டி முதலியன அவரைச் சூழ்ந்து கிடந்தன. வாத்தியார் மேகநாதம் பிள்ளை சோர்ந்து உட்கார்ந்திருந்தார். அந்த நேரத்தில் வேலப்பன் வியர்த்து விறுவிறுத்துப் போய் உள்ளே நுழைந்தான்.

"வேலப்பா!" — வாத்தியார் வாய் திறந்து பேசினார்.

"ஒத்திகை தானே! கன ஜோர்!"–பதிலிறுத்தான் வேலப்பன்.

"வேலப்பா!"

"ஐயா!"

"வேலப்பா!!!"

வேலப்பன் மிரண்டு போய் அவர் பக்கம் போய் நின்றான். மேகநாதர் வேறு பக்கமாகத் திரும்பிக்கொண்டு,"நாடகக்குழுவைக் கலைத்துவிடு" என்றார்.

"நாடகக் குழுவையா?"—திகிலோடு.

"ஆமாம், நாடகக் குழுவைத் தான் கலைத்துவிடச் சொல்லுகிறேன். நாடகத்தால் விளைந்த நாசம் போதும்! கூத்தால் குடும்பத்தின் கௌரவம் போக வேண்டாம். இதோ நூறு ரூபாய் இருக்கிறது எடுத்துக்கொள்—எங்காவது போய் பிழைத்துக்கொள்! வருந்தாதே வேலப்பா, வளர்த்தேன், வாழ வழி காண்பித்துவிட்டேன்—எடுத்துக் கொண்டுபோ ரூபாயை" என்று கூறி வேலப்பன் பக்கமாகத் திரும்பினார் மேகநாதன்வேலப்பனைக் காணவில்லை அந்த இடத்தில் கூந்தலைக் கோதிக்கொண்டு கோதைதான் நின்றாள்.

வேலப்பன் தாழையூரை விட்டுப் பிரிந்தான். ஆனால் அவனுடைய நடிப்புத்திறனை தாழையூர் போற்றியது—நடிப்புக் கலைஞனான்–ஒரு சிறு நாடகக்குழுவிற்கு அதிபனானான்.

ஆறு மாதங்கள் ஓடின. அப்போது கோதை ஊரைவிட்டு ஓடி நான்கு மாதங்களாகியிருந்தன. வேலப்பன் இழுத்துச் சென்றுவிட்டதாக ஊரிலே வதந்தி. ஆமாம், எந்த வேடன் மாடப் புறாவைக் கொஞ்ச பதுங்கியிருந்தானோ அந்த வேடன் கோதையை தூக்கிப் போய்விட்டான்.

ஃ ஃ ஃ

பிரக்ஞை இழந்த வேலப்பன் முருக வேடத்தோடு பிணமானான். உடலைச் சோதித்த டாக்டர் விஷ முண்டிருப்பதாக சொன்னார்."இனிநான் பிழைக்க மாட்டேன்; எனது குரு மேகநாதரிடம் என் பிணத்தைச் சேர்ப்பித்து விடுங்கள். என் சொத்துக்கள் அவருக்கே உரித்

7-ம் பக்கம் பார்க்க

[அரசியல் கற்பனை]

# பெரியகுளம் - சிறிய மீன்கள்!

"கூட்டமே கூடவில்லை—ஆயிரம் பேராவது வருவார்கள் என்றுஎதிர்பார்த்தார்கள். அலங்காரமான பந்தலும் போட்டார்கள்! ஆனல் வந்த மக்களோ ஐநூறையும் எட்டிப் பிடிக்கவில்லை. அவர் வருகிறார் இவர் வருகிறார் என்று "தடால் படால்" விளம்பர மெல்லாம் செய்தார்கள். எவர் வந்தால் எமக்கென்ன என்று பொது மக்கள் சொந்த வேலையை கவனிக்கப் போய்விட்டார்கள் நேரம் ஆக ஆக கூட்டத்தில் 'கோரம்' ஏற்படும் என்று கடைசியாகஎதிர்பார்த்தார்கள். வந்தவரும் எழுந்துபோய் மகா 'கோரம்'ஏற்பட்டுவிட்டது. சரி; மக்கள் வந்தவரையில் சரி—நம்முடைய பழைய பல்லவியைப் பாடுவோம் என்று வாயைத் திறந்தார்கள். சொற்பொழிவுகளை மழையெனக் கொட்டினர்கள். சு ரு ங் க ச் சொன்னல் கரடியாகக் கத்தினர்கள். எந்தவிதமான வரவேற்பும், பாராட்டும் வந்திருந்த கூட்டத்தார் வ ழ ங் க வே யில்லை. ஏமாந்தார்கள்—ஏமாந்தார்கள்—ஆனலும் வெளியில் சொல்லிக்கொள்ள வெட்கப்பட்டு, அம்மாமி—ஆட்டுக்கறி திருட்டுக் கொடுத்த கதையைப் போல, உள்ளுக்குள்ளேயே புலம்பிக்கொண்டார்கள், கூட்டம் நடத்திய வீரர்கள்."

என்னப்பா இடை வேளையில்லாமல் பேசிக் கொண்டேபோகிறாய் என்று தடுத்து நிறுத்தினேன் நண்பனை. நண்பன் சிரித்தான். சிரித்ததோடு முடிக்கவில்லை. மீண்டும் தொடர்ந்தான். "இப்போது நான் குறிப்பிட்டேனே; இதுபோல ஒருநிலைமை வரப் போகிறது" என்றான் நண்பன். "சரிதான் போ! எதிர்காலத்தைப் பற்றித்தான் இவ்வளவு ஆரூடம் கூறினயோ? ஆமாம் அந்த நிலைமை யாருக்கு வரப் போகிறது? காங்கிரஸ் கட்சிக்கா? அல்லது தமிழ்...?" என்று கேட்பதற்குள் நண்பன்—"சே! சே! அவர்களுக்குத்தான் முன்பே வந்துவிட்டதே இனிமேல் தானு வரப் போகிறது—நான் சொல்வது, இப்போது பதவி வேட்டைக்காகவே கட்சியை ஆரம்பித்து மக்களை ஏமாற்றி லட்சியம் ஈடேறிவிட்டது; இனி கட்சி தேவையில்லை என்றுகட்சியைக் கலைக்கத் துணிகிறார்களே; அவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றியது" என்றான் நண்பன்.

"ஓகோ! தற்காலிக அரசியலையும்—எதிர்கால அரசியலையும் தூக்கிப் பார்த்து சிந்தனைக்கு வேலை கொடுக்கிறாய் போலும்—சரி வா—குளக்கரையில் உட்காருவோம்—குளிர் தென்றல் வீசுகப் போகிறது" என்றேன்.

இருவரும் வழக்கமாக உட்காரும் பெரிய குளத்தின் கரையிலே உட்கார்ந்தோம்.

பெரிய குளம் எங்கள் கிராமத்திற்கே உயிர் வழங்கும் குளம். குளிப்பதற்கும், குடிப்பதற்கும் அதைத் தவிர ஊர் மக்களுக்கு வேறு வழியே கிடையாது. குளத்தின் எதிரிலேயே பெரிய கோயில். கோயிலின் வலப் புறத்திலே அக்கிரகாரம். தெற்கேயிருந்து வீசும் அருமையான காற்று அக்ரகார வாசிகளின் ஆனந்தத்தை அதிகப் படுத்தும். அக்கிரகாரத்தின் தி ண் ணை களையும், ஓரங்களையும் தேடி ஊர் மக்கள் கொடுமை தாங்க முடியாத வெயில் நேரங்களிலே ஓடுவார்கள். முன்னெல்லாம் என் தந்தையார் கூட பகல் நேரங்களில் உஷ்ணத்தின் தாக்குதலில் இருந்து மீள அக்கிரகாரத்து திண்ணைகளிலேயே அமர்ந்திருப்பார். பெரிய குளத்திலிருந்து வீசும் கு ளி ர் ச் சி நிறைந்த காற்று மாத்திரம் இல்லாவிட்டால் எங்கள் ஊரில் வாழ முடியாதுதான். அத்தகைய குளக்கரை எனக்கும் என் நண்பனுக்கும் மாலை நேரத்துக் கடற்கரையாக இருந்தது. என்றும் போல் அன்றும் கரையில் அமர்ந்து தமிழ் நாட்டு அரசியல் நிலைகளைப்பற்றி பேசிக் கொண்டிருந்தோம். நண்பன் ஆரம்பித்தானே ஒரு ஆரூடம்—அதிலிருந்து அ ர சி ய லை த் தொ ட ர் ந் து பு தி தா க அமைந்திருக்கும் சென்னை மாகாணத்து மந்திரி சபை குறித்தும், அதில் இடம் பெற்றுள்ள மந்திரிகளைக் குறித்தும் பெரியதோர் ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருந்தோம்...பேசிக் கொண்டிருந்த நாங்கள் குளிர்ந்த காற்றின் மென்மையான அணைப்பினல் தூங்கிவிட்டோமோ என்னமோ—தெரியவில்லை. அந்தக் குளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியை மட்டும் சொல்லாமல் இருக்க முடியவில்லை. நடந்ததோ—அல்லது எங்கள் மாலைத் தூக்கத்தில் கண்ட கனவோ அதுவும் புரியவில்லை—இருவரும் ஏக காலத்தில் ஒரே கனவைக் கண்டோமா? அல்லது ஒரே நிகழ்ச்சியைப் பார்த்தோமா? — எப்படியிருந்தால் என்ன — விஷயத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.



குளக்கரையின் ஓரத்தில் புதர் அடர்ந்த ஒருஇடம். குளத்திற்கு தண்ணீர் பாயும் மதகு. அந்தமதகின் பக்கமெல்லாம் தண்ணீர் நிரம்பி யிருக்கிறது. அந்த நீருக்குள்ளே யாரோ சிலர் "கிச்கிச்" என்று பேசும் சப்தம்கேட்டது. கவனித்தோம்—உற்றுப் பார்த்தோம். பத்து அல்லது பதினைந்து மீன் குஞ்சுகள் ஒன்றாகக் கூடி நின்று பேசிக்கொண்டிருந்தன. எங்கள் கிராமத்தில் அந்த சிறிய மீன்களை "நெத்திலி" என்று சொல்லுவோம். அந்த மீன்கள், குஞ்சுகளைப் போலவேயிருக்கும். பெரிதாக வளராது. அந்த சிறு மீன்கள்என்னபேசிக் கொண்டன தெரியுமா?

"நாமும்தான் இந்தக் குளத்தில் இத்தனை நாளாய் வாழ்கிறோம்—வேறு மீன்களும் தான் வாழ்கிறார்கள். அந்த மீன்கள் எல்லாம் தினம் தினம் குழம்புக்குப் போகிறேன் என்று கூறிவிட்டுப் போகிறார்கள். நேற்று "கெண்டை" செட்டியார் குழம்புக்குப் போனர். அதற்கு முதல் நாள் "கொரவை" முதலியார் குழம்புக்குப் போகிறேன்என்று சொல்லிவிட்டுப்போனர். நமக்கு வாளைப்பாம்புக்குத்தலையும்காட்டுகிற "விலாங்கு" அய்யர் இருக்கிறேர்: அவரும் குழம்புக்குப் போய்விட்டதாக செய்திவந்தது. வாலாஜா வாய்க்காலில் இருந்து வந்த " நண்டு " நாய்க்கரும் கு ழ ம் பு க்குப் போய்விட்டார். இன்றைய தினம் "விரால்"நாடாரும் குழம்புக்குப் போகிறேன் என்று என்னிடம் சொல்லிவிட்டுப் போனர்—அவரைத் தொடர்ந்து, இன்னும் யார் யாரோ போகப் போகிறார்கள். நமக்கு மாத்திரம் குழம்புக்குப் போகிற உரிமை கிடையாதா? நாம் அவ்வளவு அதிர்ஷ்டம்செய்யாதவர்களா?" என்று ஒவ்வொரு மீனும் மிகவும் வருத்தத்தோடு பேசிக் கொண்டன. குழம்புக்குப் போவது என்பது மிகவும் பெருமையான காரியம் என்றும் அப்படிப் போகாமல் இருப்பது கேவலமென்றும்அந்த சிறிய மீன்களின் மகா நாட்டில் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. அந்தச் சமயத்தில் மாநாட்டுப் பந்தலுக்கு ஒரு சிறு மீன் வேகமாக ஓடிவந்தது. அந்த மீனை எல்லா மீன்களும் சூழ்ந்து கொண்டு "என்ன கமலம்! ஏன் இப்படி ஓடி வருகிறாய்?" என்று கேட்டன. கமலம்என்பதுபெண் மீன் போலும்! உடனே கமலம், தாங்க முடியாத மகிழ்ச்சியுடன்; மற்ற மீன்களைப் பார்த்து, "நாமெல்லாம் குழம்புக்குப் போகிற நேரம் வந்து விட்டது. அதோ பாருங்கள்—அந்த ச்சிறிய வலை நம்மை நெருங்கி வருகிறது என்று துள்ளிக் குதித்தது! சந்தோஷ செய்தி சொன்ன கமலத்தை எல்லா மீன்களும் மாறி மாறி முத்தமிட்டன. கமல மீன் சொன்னபடி வலை நெருங்கி வந்தது. குழம்புக்குப் போக ஆசைப்பட்ட சிறிய மீன்கள் எல்லாம் கும்மாளம் போட்டுக் கொண்டு, தாங்களாகவே அந்த வலையில் போய் விழுந்தன. "குழம்புக்குப் போகிறோம்" என்ற ஒரு புதிய பாட்டை இந்துஸ்தானி மெட்டில் எல்லா

8ம் பக்கம் பார்க்க

## இவர்கள் யார்?

கட்டங்களிலுள்ள கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய்க!

(1) இலங்கையில் தன் மக்களை அவதிப் பட விட்டவரிடம் சரசம் வைத்துக்கொண்டு தன் மக்களை எதிரியின் கையில் ஒப்புவித்து ஆனந்த நடனமாட விட்ட துரோகியின் பெயர்

வி............

(2) கட்சித் தொண்டர்களிடம் நம்பிக்கை யில்லாது கட்சியை இரண்டாக்க காரணமான ஜனநாயக விரோதி

......யார்

(3) துரோகி என்று குற்றம் சாட்டப் பட்டவர்

பெரி......

(4) சினிமாவை வெறுப்பவர்

குரு......

விடை 7-ம் பக்கத்தில்!

# கலைத்தோட்டம்

## கூழாங்கல்லால் உயர்ந்த வைரம்!

கோத்திடும் முத்துக்களென வரிசை வரிசையாய் அணிவகுப்பு வார்த்து ஊற்றிய தங்கக் குழம்போவென கண்களிலே ஒளியின் ஊடுருவல்! நடையிலே மிடுக்கேற்றி வீட்டிலே விடைபெற்று களம் நோக்கினர் அன்றொரு நாள் ஏதென்ஸ் நாட்டுக் காளைகள். சற்று முன்னர் மாசிடோனிய நாட்டு பிலிப்—என்றதும் கைகட்டி வாய் பொத்தி நின்ற ஏதென்சு மக்களா இப்படி வேங்கையெனப் பாய்கிறார்கள்? "ஒரு சில மணித் துளிகளில் ஒரு நாட்டையே போருக்குத் தயார் செய்த அந்த பட்டாள வீரன் யாரப்பா?"—இப்படி பிலிப் மட்டுமல்ல உலகமே கிளிப்பிள்ளை மாதிரி திருப்பத் திரும்ப கேட்டது. அந்த வீரனுக்கு வரலாறு வெண்மலர் ஆரம் சூட்டியது. சரித்திரத்திலே வைரமெனஜ்வாலையிடும் டெமாஸ் தென்சின் பெயர் நமக்குச் சொல்லும் கதை மேடைப் பேச்சின் சிறப்பு பற்றிதான்!

சிறுவன் டெமாஸ் தென்சுக்கு பேசத் தெரியாது. அவன் ஊமையல்ல; ஆனால் அதைவிடப் பரிதாபமான திக்குவாயன். அந்த உளறுவாய்க் காரன்தான் பின்னர் ஒரு சமயம் ஊராரைத் திரட்டி உணர்ச்சி பெறச் செய்தான். டெமாஸ் தென்ஸ் புண்ணிய பாரதத்திலே அவதரித்திருந்தால் வியாதி போக்க ஆயிரம் முறை ஆலமரத்தைச் சுற்றியிருப்பான்—கால்கடுக்க படிகளில் ஏறி நீலமலை ஆண்டவனைத் தரிசித்திருப்பான்—நாகூரானுக்கு தங்க நாக்கு—மற்றும் விரதங்கள் இருப்பதிலும் விபூதிப் பிரசாதம் அணிவதிலும் காலம் நழுவி இருக்கும். ஏதென்சு நாட்டு அறிவுச் சுரங்கம் மாற்றானுக்கு அடகு போய்விடவில்லை—டெமாஸ் தென்சும் தலையெழுத்தை நம்பும் சிறுவனல்ல. வாயிலே கூழாங்கற்களைப் போட்டுக்கொண்டு திரைகடலோடு போட்டியிட்டுக் கொண்டு பேசுவான்—மயக்கம் வரும் வரை பேசிக்கொண்டே இருப்பான். நாள் ஆக ஆக அவன் நாக்கு திருந்தியது; அவன் வாக்கை கேட்க ஏதென்சே திரளும் காலமும் வந்தது. ஒரே நொடியில் தன் சூறாவளிப் பேச்சால் ஏதென்ஸ் மக்களை பிலிப்பின்மேல் ஏவிவிட்டான் டெமஸ்தென்ஸ்! இன்னும்கூட ஆங்கிலத்திலே "பிலிப்பிக்" என்ற அடைமொழி ஆவேசப் பேச்சைக் காட்டி டெமாஸ் தென்சுக்கு மரியாதை செய்கிறது•

டெமாஸ்தென்ஸ் மனிதஜாதியின் சக்திவாய்ந்த முதல் பேச்சாளி. அவனுக்குப் பின்னர் பேச்சு விலைமதிக்க முடியாத ஒரு கலையாகிவிட்டது. ஜூலியஸ் சீசரின் பிணத்தை வைத்துக் கொண்டு அன்றொருநாள் ஆண்டனி மயானப் பேச்சு நடத்தினன். அந்தப் பேச்சு ரோமானியர்களின் இரத்த ஓட்டத்தை நிறுத்தியது. உள்ளம் சில்லிட்டது. உடல் வியர்த்தது. "எங்கே கொடுமைக் காரர்கள்?" என்ற முழக்கம் வானைப் பிளந்தது. சீசரின் பிணம் வெந்த தீ அணையு முன்னர் சூழ்ச்சிக் காரர்களும் அந்த நெருப்பிலே தூக்கி எறியப்பட்டனர். பிரெஞ்சுப் புரட்சியின்போது கோட்டை பிடியென முழங்கி உணர்ச்சிப் பெருக்கால் பிரான்சையே ஆட்டிவைத்தான் மிரபோ என்பவன்!


ஜனநாயகம் சுடர் விடும் இந்தக் காலத்திலே பேச்சு மக்களாட்சியின் 'துவாரபாலகராக, மாறிவிட்டது. அரசினரின் கொள்கையை மக்களின் முன் வைக்க—எதிர்க்கட்சினர் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்ல ஓட்டு வேட்டையாட — இவையெல்லாம் பேச்சின் துணை கொண்டுதான் நடைபெருகின்றன.

அமெரிக்க நாட்டு ஆபிரகாம் லிங்கன்பதினைந்துவயதிலிருந்தே தோட்டத்திலிருக்கும் பரங்கிப் பழத்திற்கும்,கோதுமைக்கதிருக்கும் முன்னால் நின்று கொண்டு பேசிப் பழகிக் கொள்வாராம். ஐரோப்பாவின் தலைசிறந்த பேச்சாளராக மதிக்கப்படும் சர்ச்சில் எழுதிப் பார்த்துக் கொண்டபின்னர்தான் பேசுவாராம். போர்க் காலத்தில் பார்லிமெண்டில் பேசுவதற்காக ஆறுவாரங்கள் அரும்பாடுபட்டு ஒரு பேச்சை தயாரித்தாராம்!

பெரியார் ராமசாமியை ஆசியாவின் தலைசிறந்த பேச்சாளர் என்று சில மாதங்களுக்கு முன்னர் வர்ணித்தது "கேரவன்" என்ற ஆங்கில இதழ்.

புராணப் பிரசங்கங்கள் – கதா காலட்சேபங்கள் – இப்படி ஆரியம் தனது கொள்கைகளைப் பிரச்சாரம் செய்து வந்த காலங்களில் புதியதொரு பாதையை மறுமலர்ச்சி இயக்கம் காட்டியது. அக்ராசனதிபதி தலைவரான பெருமை தென்னாட்டு இங்கர்சால் அண்ணாவைத்தான்சேரும். இருபதாம் நூற்றாண்டிலே பேச்சு மக்களாட்சியோடு கைகோர்த்துக் கொண்டே வளர்கிறது! தமிழ் நாட்டிலே மேடைப் பேச்சு திருந்தி பெருமை பெற்றதென்றால் அதற்குக் காரணம் அறிவியக்கத்தின் அரும்பாடுதான்!

"இவர்களால் என்ன செய்ய முடியும்? பேச்சுக் கச்சேரி செய்யத்தான் தெரியும்" என்று வசை பாடுகிறார்கள், அதுவும் தெரியாதவர்கள்! அவர்கள் உணரவேண்டும் பேச்சு சாதித்ததை வாள் வீச்சுகூட சாதித்ததில்லை என்பதை!





இந்தப் படத்தில் இருப்பவர் யார் தெரியுமா? உங்களுக்குத் தெரியாதுதான்—இதே பக்கத்தில் வெளியாகியிருக்கும் "நாடகத்தில் ஒரு நாள்" என்ற கட்டுரையின் ஆசிரியர் இவர்தான் இளம் பிராயத்திலே இப்படி எழில் மோகினியாகத் தோன்றினாராம் ஒரு மேடையிலே!

## நாடகத்தில் ஒரு நாள்!

துவாரபாலகர் வைகுந்தத்தின் வாயில்காப்போர். விஷ்ணுவைக் காணவரும் முனிவர்களை உள்ளேவிட அவர்கள் மறுப்பர்—அப்போது முனிவர்கள் வெகுண்டு துவாரபாலகனை மனிதனாகும்படி சாபமிடுவர்.

அப்போது வேட்டு சப்தம் கேட்க, தக்கைக் கைகளும் கிரீடமும் தந்திரக் காட்சி மூலம்அகற்றப்படும்.

பின்பாட்டு நாராயண நாயர் என்ற பழம் பெரும் நாடக நடிகர் ஒருமுறை துவார பாலகர் வேடம் தாங்கியிருந்தார். வழக்கமாக அவர் அணிந்து கொள்ளும் 'டோப்பாவை' எடுத்துப் போட்டுக் கொண்டு மேடைக்கு வந்திருந்தார். தேங்கா யெண்ணை தடவப்பட்டிருந்தடோப்பாவிற்குள் புகுந்திருந்த எறும்புகள் கடிக்க ஆரம்பித்தன. நாயரால் எறும்பு கடியைத் தாங்க முடியவில்லை. (ஹவ்வு) "இதென்னடா இது" என்று கூவிக் கொண்டே கிரீடத்தைச் சரிசெய்தார். அதற்குள் ஒரு தக்கைக்கை தொங்க ஆரம்பித்தது. வந்திருந்த முனிவர்கள் அவர்களுக்கு பாடமான சாபத்தை போட்டுவிட்டார்கள். சீன் வேலையாள் வேட்டுச் சத்தம் கேட்டதும் கம்பியைப் பிடித்து இழுத்தார். அவ்வளவுதான் கிரீடத்துடன் டோப்பாவும் மேலே போயிற்று. துவார பாலகரில் ஒருவர் நரைத்த தலையுடன் (கிராப்புடன்) காட்சியளித்தார். கிரீடம்மேலே போயிற்று. நாராயணன் நாயர் விடவில்லை. டோப்பாவைப் பிடித்திழுத்தார். கீழே வந்தது. ஏன் தெரியுமா? இவர் எறும்பு கடிக்காக கிரீடத்தைச் சரி செய்தபோது கிரீடத்தில் கட்டியிருந்த கம்பி டோப்பாவில் சிக்கிக் கொண்டது. சீன் வேலைக்காரர் வேலையைச் செய்தார். டோப்பாவும் கிரீடத்துடன் மேலே போயிற்று. இதற்குள் வைகுண்டத்தின் கதவும் திறந்தது. விஷ்ணுவும்வந்து விட்டார். இத்தோடு காவலரின் சண்டை முடியவில்லை. விஷ்ணுவுக்கு சிரிப்பு! என்ன பேசுவது என்றே தெரியவில்லை. முனிவர்களின் சாபம் வெற்றி பெறவில்லை.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்.

# அருபியை அழகியாக்க அலகாபாத் வீரரின் தந்திரம்!

நேற்றுவரை நம் மொழியை அலட்சியப் படுத்தி நமது நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தவர் இன்று "நானறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்எங்கும்காணேன்" என்று கீதமிசைக்கிறாரென்றால் அந்த கீதம் இதயத்தின் அடிவாரத்திலிருந்து நல்லெண்ணத்தின் துணை கொண்டு ஒலிக்கிறதா, அல்லது திரண்டுவரும் தென்னாட்டு மக்கள் சக்தியை தீர்த்துக் கட்டும் திநோக்கோடு இசைக்கப்படும் ஜாலகீதமா என்று ஆராய்ந்துதான் முடிவு கூற வேண்டும்.

பண்டிதநேரு சென்ற வாரம் தில்லையிலே நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் 'தமிழ் இந்தியாவின் மாபெரும் மொழிகளில் ஒன்று. அதற்கு என் வணக்கம் உரித்தாகுக. தமிழ் மொழி இந்தியாவுக்கே ஜீவாதாரமான முக்கியத்வம் வாய்ந்தது' என்று கூறியிருப்பதை அனைவரும் அறிவர்.

டில்லி மூல தெய்வத்தின் இந்த வாய்மொழி கேட்டு அன்னவரின் பக்தர் குழாத்தினர் பரவச முற்றார்கள் — பத்திரிகைகளில் எழுதினார்கள். ஆனால் நாம் சிரிக்கவில்லை—நமது சிந்தை மகிழவில்லை. காரணம், பண்டிதரின் 'பாகுமொழி'யின் பொருளை நாமறிவோம்.

காங்கிரஸ் இயக்கம் அதிகாரத்தின் சுவையை அறிந்த நாள் தொட்டு இந்தியைத் திணிப்பதற்கு எத்தனையோ முறைகளை வலுக்கட்டாயமாகப் புகுத்தினார்களே அப்போதெல்லாம் 'பேசாமடந்தை'யாக இருந்த நேரு இப்போது மட்டும் தமிழின் மகிமை பற்றிப் பேசுவானேன்? 1920ல் கராச்சி காங்கிரசில் தானே கொண்டுவந்த மொழி வழிமாநில அமைப்புத் தீர்மானத்தை தன் கையாலேயே கழுத்தை நெறித்துக் கொன்றுவிட்டு, மொழிவழி மாநில விஷயத்தில் காங்கிரசார் கலந்து கொள்ளக் கூடாது என்று கண்டனக் கணைகளைக் கிளப்பும் நேரு தமிழின் பெருமைபற்றி இப்போது பேச நேர்ந்ததற்குக் காரணமென்ன? இதோ பண்டிதர் தொடர்ந்து பேசுகிறார் கேளுங்கள்! "பிற மொழிகளிலுள்ள நல்ல இலக்கியங்களை இந்திய இலக்கியமாக்க வேண்டும்" பண்டிதர் இவ்வாறு கூறியிருப்பதின் உட்பொருள் நல்ல இலக்கியங்களை இந்தியில் மொழி பெயர்த்து அவ்விலக்கியங்களை நாடு முழுவதும் பரப்புங்கள் என்பதுதான் என்பதை ஆராய்ச்சி நுணுக்கம் படைத்தவர்கள் நன்கறிவர். இந்திய இலக்கியம் என்றால் 'இந்தியில் மொழி பெயர்க்கச் சொல்வதுதான் என்று நாம் ஏன் கூறுகிறோமென்றால், இந்தியாவின் பொது மொழி இந்திமொழியென்று காங்கிரஸ் ஆட்சி பறை சாற்றியிருப்பதை வைத்துத்தான்! அருபியாம் இந்தி மொழியை அழகியாக்க பண்டிதர் கையாளும் புது வழியை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

...(ஃ)...

## எஸ். கே. மொய்தீன்.

○

ஜூபிடர் திரைப் படக் கம்பெனியின் பங்கு தாரரும் திரையுலகில் மிகப் பிரசித்தி பெற்ற திறமையாளருமான எஸ். கே. மொய்தீன் மறைந்தார் என்ற செய்தி கேட்டு திடுக்கிட்டோம். அரும்பெரும் படங்கள் பலவற்றை வெளியிட்ட ஜூபிடர் கம்பெனிக்கு இது ஒரு மகத்தான நஷ்டமாகும். குடும்பம் ஒரு நல்ல தலைவனை இழந்தது. மக்கள் தந்தையை இழந்தார்கள் திரு சோமசுந்தரம் கெழுதகை நண்பர் ஒருவரை இழந்தார். அவர்கள் அனைவருக்கும் நமது அனுதாபம் உரியதாகுக!

...○...

## கண்ணதாசன், தருமு அப்பீல் ஜாமீனில் விடுதலை.

கல்லக்குடி வழக்கில் 1 1–2 ஆண்டு தண்டிக்கப்பட்ட தோழர்கள் கண்ணதாசன், அம்பில் தருமலிங்கம் மற்றும் 18பேர் உயர் நீதிமன்றத்தில் செய்து கொண்ட அப்பீல் ஏற்றுக் கொள்ளப் பட்டு, அனைவரும் ஜாமீனில் விடுதலை செய்யப் பட்டனர்.

## இவர்கள் யார்?

○

### விடைகள்

○

(1) விபீடணன்
(2) ஆச்சாரியார்
(3) பெரியா
(4) குருடர்

## முரசொலி

○

ஆண்டு சந்தா ரூ. 6–0–0
ஆறு மாத சந்தா ரூ. 3–8–0

ஆறுமாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

## வேலன்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகட்டும்" என்று வேலப்பன் தன்து கடைசி வாக்கு மூலத்தில் கூறியபடி. அவனது உடல் மேகநாதர் வீட்டுக்கு எடுத்து வரப்பட்டது. வைரத்தால் ஜோடனை செய்யப்பட்ட அந்த அழகு முருகனின் சடலத்தை—வேலப்பனின் பிரேதத்தை மேகநாதர் ஏற்றுகொள்ள மறுத்துவிட்டார்.

"நன்றி கெட்ட அந்த நயவஞ்சகனை — நாசக்காரனை — நீசனை என் முன் காட்டாதீர்கள். கொண்டு போங்கள்.' என்று கடிந்து பேசினார் மேகநாதர். பிரேதவண்டி திரும்பியது.

பொழுது புலர்ந்தது. மற்றொரு சோகச் செய்தி மேகநாதரின் இதயத்தை தாக்கிற்று. மேகநாதரின்புதல்விகோதை, வடக்கு வாசல் செல்லாயி அம்மன் கோயிலின் முன்பாக தூக்குப் போட்டுக் கொண்டு கிடப்பதாக ஊர் முழுவதும் செய்தி பரவியது. மேகநாதர் ஓடினார் – அவர் குடும்பமே அலறிக்கொண்டு ஓடியது. கோதை பிணமாகத் தொங்கினாள். அவள் புடவையில் ஒரு கடிதம் கட்டித் தொங்க விடப் பட்டிருந்தது. அதில்,

" நான், நடிகன் வேலனை காதலித்தேன். இதைச்சாதகமாக வைத்துக்கொண்டு பெரியசாமி பிள்ளை வேலப்பனையும், என்னையும் சூழ்ச்சியால் பிரித்தார். ஒரு நாள் இரவு பெரியசாமி பிள்ளை என்னை பலாத்காரமாக தூக்கிச் சென்று ஒருமறைவிடத்தில்வைத்துவிட்டு வேலப்பனோடு ஓடிவிட்டதாக துர்ப்பிரச்சாரம் செய்தார் —ஊர் அதை நம்பிற்று. பெரியசாமியின் துர் அதிர்ஷ்டவசமாக, என் நெஞ்சைக் கவர்ந்த வேலப்பனின் குழுவே இவ்வூர் புரவியெடுப்புக்கு நாடகமாட வந்தது. வேலப்பனை உயிரோடு விட்டால், வேலப்பனிடம் கோதை இல்லை என்ற உண்மை வெளியாகி விடுமோ என்பதற்காக வேலப்பனை நாடகக் கொட்டகைக்குள் விஷமிட்டுக் கொள்ள பெரியசாமி திட்டம் தீட்டினார்.

வேலப்பன் விஷம் குடித்து சாவதற்குள் விஷயத்தை வெளிப்படுத்திவிட முயன்றேன். பெரியசாமியை நஞ்சிட்டுக் கொன்று விட்டு ஓடிவந்தேன் — ஆனால் அதற்குள் வேலப்பன் இறந்து விட்டார் என்ற தூக்கச் செய்தி கிடைத்தது—தூக்குப் போட்டுக் கொண்டு தொங்குகிறேன்" என்று எழுதியிருந்தது. மேகநாதர் துடித்தார்—வாய்விட்டுக் கதறினார்—கோயிலுக்குப் பக்கத்திலிருந்த மயானத்தில் வேலப்பனின் பிணம் எரிந்து கொண்டிருந்ததையும் அவர் பார்க்காமலில்லை—'வேலப்பா—வேலப்பா' என்று கத்தினார் 'கோதை—கோதை' என்று கூவினார். விருத்தாப்பிய வயதிலே மேகநாதர் பாடிய சோகவிருத்தம் கோயில் மதில் சுவரில் மோதி எதிரொலித்தது. ஃ

## மே இதழ்

'முரசொலி'யின் அடுத்த இதழ் (30—4—54) மே மலராக வெளிவரும்.

**12 பக்கங்கள்**
**விலை இரண்டணாதான்**

கூடுதலான பிரதி வேண்டுவோர் முன்னதாகவே அறிவித்து விடவும்.

நிர்வாகி
"முரசொலி"

## ஆடும் ஆச்சாரியார்

இளமுருகு பொற்செல்வி
எழுதியது
**0—8—0**
**நம் நாட்டுப் பண்ணை**
மணப்பாறை
திருச்சி மாவட்டம்

## கட்டுரையாளர்களுக்கு

○

முரசொலியில் வெளியிட பல தோழர்கள் கட்டுரைகள் அனுப்புகிறார்கள். இடமின்மையால் அவைகளை வெளியிட இயலாமைக்கு மிக மிக வருந்துகிறோம். முரசொலி மலர்களில் அந்த தோழர்களின் கட்டுரைகளை வரவேற்கிறோம்.

ஆசிரியர்.

## நேருஜி

| அங்கும் | இங்கும் |
| --- | --- |
| தில்லையிலே தேஜஸ் குறையாத தீக்ஷதர்களின் திரு உருவம் கண்டார். | நெய்வேலியிலே வியர்வை சொட்ட உழைத்திடும்சுரங்கத் தொழிலாளிகளையும் கண்டார்! |

# கடைசிப்பக்கம்

(?) எழுத்தாளர்களின் இலட்சியங்கள் யாவை? அண்மையில் சென்னையிலும் தில்லியிலும் நடைபெற்றதை எழுத்தாளர் மாநாடு என்று கூறலாமா?

எழுத்தாளர்களின் லட்சியம் என்ன என்பதைவிட எழுத்தாளர்களுக்கு, ஒரு லட்சியம் இருக்கவேண்டுமாவேண்டாமா—என்று கேட்பதே சரியானது. ஏனெனில் பல எழுத்தாளர்கள் லட்சியமில்லாமலே எழுதுகிறார்கள். என்ன எழுதுவது எதைப் பற்றி எழுதுவது என்றலட்சியம் அவர்களுக்கிருப்பதில்லை.

சென்னையிலும், தில்லியிலும் நடைபெற்றதை எழுத்தாளர் மாநாடு என்று கூறலாம். ஆனால் தமிழ் எழுத்தாளர் மாநாடு என்று கூறுவது தமிழன்னைக்கு செய்யும் மகத்தான துரோகமாகும்.

(?) பொதுவுடமைக் கட்சியினர் ராமமூர்த்திக்குத்தரும்மதிப்பை ஜீவாவுக்கு கொடுக்காத மர்மம் என்ன?

ஜீவாவுக்கு மதிப்பு கொடுக்கச் சொல்லி காரல் மார்க்ஸ் எழுதியிருக்க மாட்டார். அதனால் தானிருக்கும்!

(?) காமராசரின் மந்திரி சபைக்கும் ராஜாஜி மந்திரி சபைக்கும் என்ன வித்தியாசம்?

அந்த நாடகத்தில் ஒரே ஒரு விபீஷணன்—இதிலே இரண்டு விபீஷணர்கள்—அவ்வளவுதான்!

(?) கவர்னர் சம்பளம் அதிகமாயிருக்கிறது என்று எல்லோரும் சொல்வதாக கவர்னர் வருத்தப்படுகிறாராமே; உண்மை தானா?

சொல்லிக் கொண்டிருந்தால் வருந்தத்தான் செய்வார்.

(?) கம்யூனிஸ்டுகளின் ஐக்கிய முன்னணி அமைப்புகள் எப்படி யிருக்கின்றன?

வெற்றிகரமா யிருக்கின்றன; நான்கூட பார்த்தேனே—மதுரையில் முனிச்சாலை ரோட்டில் கம்யூனிஸ்டு—காங்கிரஸ்—தமிழரசு மூன்று கொடிகளையும் ஒன்றாகக் கட்டி, ஐக்கிய முன்னணி அமைத்து, அம்பாள் உற்சவம் நடத்தினார்களே!

(?) ஹைட்ரஜன் குண்டு பரிசோதனை பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

அதையேன் பரிசோதனை என்று எண்ணுகிறீர்கள்; சமாதானத்துக்கு பங்கம் விளைவிக்கும் குண்டுகளையெல்லாம் ரஷியரும் அமெரிக்கரும் கடலில் தூக்கி எறிகிறார்கள் என்று-இங்குள்ள இரு நாட்டு பக்தர்களும் கூறுகிறார்களே—அதைக்கேட்டு திருப்தி அடையுங்களேன்!

(?) இலங்கையில் நடைபெறப் போகும் ஆசியப் பிரதமர்கள் மாநாட்டின் முடிவு எப்படியிருக்கும்?

முடிவு வழக்கம் போல் இருக்கும். ஆனால் ஒன்று; கண்டிப்பாக நடனம் எதுவும்இருக்காதென்று தெரிகிறது.

(?) சினிமா சென்சார் என்றால் என்ன?

கை நடுக்க மெடுத்தவனின் கையிலேயிருக்கும் கத்தரிக்கோல். பூட்சுக்காக காலை நறுக்கச்சொல்லும் புண்யவான்களின் மகாசபை.

(?) உழைப்பாளர் கட்சியில் மொத்தம் எத்தனை ஆயிரம் உறுப்பினர்கள்?

ஏறத்தாழ இருபது உறுப்பினர்கள். இருபது தலைவர்கள். இருபது எம். எல். ஏ. க்கள்.

(?) திராவிட நாடு கிடைத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

ஆளுவோம்.

(?) நாடக மேடைகளிலும், பேச்சு மேடைகளிலும் தி. மு. கழகத்தை இழித்தும் பழித்தும் பேசுகிறார்களே; அதுபற்றி உங்கள் கருத்தென்ன?

கழகத்தைப்பற்றி பேசமாட்டார்களே; கழகத்துமுன்னணித் தோழர்களைப் பற்றித்தான் பேசுவார்கள். அப்படிப் பேசுகிறவர்களை ரகசியமாக கேட்டுப் பாருங்கள் "எல்லாம் பிசினஸ்" என்பார்கள்.

(?) போலிப் புத்தக வியாபாரிகள் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் எப்படியிருக்கின்றன?

விரைவில் விளக்கம் வரும். பொறுத்திருங்கள்.

### அன்பழகன்

கொடுமுடி தோழர் என்.ஆர். ராசன் அவர்களின் துணைவியார் 7-4-54 அன்று ஓர் ஆண்மகவுக்குத் தாயானார்; குழந்தைக்கு 'அன்பழகன்' எனப்பெயரிடப் பட்டது.

## பெரியகுளம்....

5-ம் பக்கத் தொடர்ச்சி

சிறிய மீன்களும் பாட ஆரம்பித்தன. வலை விரித்த மனிதன் ஆசைப்பட்ட மீன்களையெல்லாம் ஒரு சிறுகூடையில்போட்டான்.

"குழம்புக்குப் போகிறோம்—
கொண்டாட்டம்போடுறோம்"

என்ற பாட்டோடு சிறு மீன்கள் நடனமும் ஆரம்பித்துவிட்டன. மீன் விழி மாதர்கள் ஆடும் நடனத்தையே அபாரம்—அபாரம் என்பார்களே; மீன்களே ஆட ஆரம்பித்தால் எப்படி யிருக்கும் என்ற எங்கள் கற்பனைக்கு சரியான பதில் கிடைத்தது!

"குழம்புக்குப் போகிறோம்" என்று ஆடிப்பாடும் அந்தக் குட்டி மீன்களுக்கு குழம்பு என்றால் இன்னதென்று தெரியாது போலும்! அந்த ஆசையாவது அவைகளுக்கு நிறைவேறியதா என்று பார்ப்போம்—அய்யோ பாவம்; வலை வீசி அவைகளைப் பிடித்த மனிதன் கூடையில் உள்ள சிறிய மீன்களை ஒவ்வொன்றாக எடுத்து, தூண்டிலின்பெரிய முள்ளில் குத்திக் கோர்த்தான். சிறிய மீனைச் சொருகி, பெரிய மீனைப் பிடிக்கும் அவனுடைய நித்திய தொழில் ஆரம்பமாகிவிட்டது. 'குழம்புக்குப்போகிறோம்' என்று பாடிக் கொண்டே, அந்தப் பரிதாபத்திற்குரிய சிறிய மீன்கள், பெரிய மீன்களின் குடலுக்குள் போய் விழுந்தன. மஞ்சள் கலந்த—வேதாரண்யம் உப்பு கலந்த — அதி—காரம் கலந்த — எலுமிச்சை (எழும் இச்சை) கலந்த—அந்தக் குழம்புக்குப் போக ஆசைப்பட்ட பெரிய குளத்து சிறிய மீன்கள் தூண்டிலின் முள்ளிலே சிக்கி பெரிய மீன்களின் வயிற்றுக்குள் போன நிகழ்ச்சி மிகவும் பரிதாபமாகத் தானிருந்தது.

நானும் நண்பனும் பிறகு, தூங்கி விழித்துக்கொண்டோமோ—அல்லது கற்பனையிலிருந்து விடுபட்டோமோ—தெரியாது; குளக்கரையை விட்டு எழுந்தோம். நண்பன் சொன்னான்; நாம் பேசிக்கொண்டதமிழ் நாட்டு அரசியல் நிலைமைகளுக்கும்—பெரிய குளத்து சிறிய மீன்களின் கதைக்கும் நிறைய தொடர்பு இருக்கிறது;" என்று!

"ஆமாம்! ஆழ்ந்துசிந்தித்தால் அப்படித்தான் தோன்றுகிறது" என்றேன் நான்.

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?

### காதல்

காதல் தெய்வீகம் என்பர் சிலர்! அது ஒரு தூய்மையான அன்புக் கோட்டை என்பர் பலர். காமத்திரையுமென்பர் —ஜீவ ஓவிய மெனவும் செப்புவர். நான்தெளிவாகச் சொல்லுகிறேன் 'அது' ஒரு குழப்பம்!


## சேலம் திராவிட முன்னேற்ற கழக சமுதாய அரசியல் மாநாடுகள்

○

### மே 1, 2, தேதிகளில்!

| சமுதாய மாநாடு | அரசியல் மாநாடு |
| --- | --- |
| தலைவர் | தலைவர் |
| ப. உ. சண்முகம் | இரெ. இளம்வழுதி எம். ஏ. பி. எல். |
| திறப்பாளர் | திறப்பாளர் |
| கோகுலகிருஷ்ணன் பி. ஏ. பி. எல். | மதுரை எஸ். முத்து |

அறிஞர் அண்ணு மற்றும் முன்னணி வீரர்கள் கலந்துகொள்வர்.

நடிப்புப் புலவர் கே. ஆர். ஆர். நாடகங்கள் உண்டு

வ. வே. க. தலைவர்: ஜி. பி. சோமசுந்தரம், செயளாலர் பி. ராமலிங்கம், பொருளாளர்: பி. ஏம். குப்புசாமி, அலுவலகப் பொறுப்பாளர்: வி. சிவப்பிரகாசம், தொ. படை தலைவர்: இரா. தாண்டவன், துணைச் செயலாளர்; ப. கண்ணன், தொ.ப. துணை தலைவர் பி. எம். கோபால்,


'சோமு' அச்சகத்தில் அச்சிடப்பட்டு, தியாகராச சுந்தர அவர்களால் வெளியிடப்பட்டது. ஆசிரியர் மு. கருணாநிதி ஜக்ரியா காலனி, கோடம்பாக்கம், சென்னை—24.